# ஹரிஸ்பத்துவ பிரதேச சபை

## கண்டி மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 29 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஆகஸ்ட் 07 ஆம் திகதி சபைத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, ஹரிஸ்பத்துவ பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஹரிஸ்பத்துவ பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

அறவீட்டுத் தலைப்பு 5 பொதுப் பயன்பாட்டு சேவைகளுக்கான கட்டணத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது ரூபா 1,821,000 தொகையான வருமானம் பெறப்பட்டிருந்ததுடன் இது அறவீட்டுத் தலைப்பு 4 நீர்ச் சேவையின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை தொடர்பான விபரம் கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | |
| (ii) | முத்திரைக் கட்டணம் | |

### 2.2.3 ஏனைய வருமானம்

(அ) இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் 02 ஹொட்டேல்களிலிருந்து புரள்வில் 1 சதவீதப் படி வரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஜேசீபீ இயந்திரம் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டமைக்காக 2012 ஆம் ஆண்டிற்காக ரூபா 26,860 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3 செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய பௌதீக வளங்கள்

மீளாய்வாண்டின் இறுதியில் செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| விபரம் | செயற்பாடற்ற காலப்பகுதி |
|---|---|
| மோட்டார் சைக்கிள் (சீஜீ 125) | 05 ஆண்டுகளுக்கு மேல் |
| உழவு இயந்திரம் (74-0578) | 05 ஆண்டுகளுக்கு மேல் |
| மார்கஸ் உழவு இயந்திரம் | 05 ஆண்டுகளுக்கு மேல் |
| லோரல் உழவு இயந்திரம் (779291) | 05 ஆண்டுகளுக்கு மேல் |